A consumer is the important visitor on our premises.
He is not dependent on us. We are dependent on him.
– Mahatma Gandhi

# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

4th Floor, SIDCO Corporate Office Building, Thiru-vi-ka Industrial Estate,
Guindy, Chennai – 600 032.
Phone : ++91-044-2953 5806, 044-2953 5816 Fax : ++91-044-2953 5893
Email : tneochennai@gmail.com Web site : www.tnerc.gov.in

**முன்னிலை: திரு. செ.தேவராஜன், மின்குறைதீர்ப்பாளர்**

**மேல்முறையீட்டு மனு எண் 04 / 2022**

திரு பு. மகாராஜா,
A2, ஸ்ரீ சாய் இல்லம்,
பஜனை கோயில் முதல் குறுக்குத் தெரு,
வேங்கைவாசல், தாம்பரம்,
சென்னை – 73.

………மேல்முறையீட்டாளர்
(Rep by திரு இரா. கிருஷ்ணன்)

எதிர்

செயற்பொறியாளர்/ தாம்பரம்,
சென்னை மின் பகிர்மான வட்டம்/தெற்கு II,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
110/11KV, தாம்பரம் துணை மின் நிலைய வளாகம்,
புதுதாங்கல், முல்லை நகர்,
தாம்பரம் மேற்கு, சென்னை – 600 045.

...... எதிர்மனுதாரர்
(Rep by திரு K. சிவராமன், உதவி செயற்பொறியாளர்/இ&ப/சேலையூர்)

**மனு பெறப்பட்ட நாள்: 05-01-2022**

**கேட்புரை நாள்: 09-03-2022 & 07-04-2022**

**ஆணை நாள்: 19-05-2022**

05.01.2022 அன்று பெறப்பட்ட திரு பு. மகாராஜா, A2, ஸ்ரீ சாய் இல்லம், பஜனை கோயில் முதல் குறுக்குத் தெரு, வேங்கைவாசல், தாம்பரம், சென்னை – 73 அவர்களின் மனு மேல்முறையீட்டு மனு எண் 04/2022 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட மனுவின் மீது மின்குறைதீப்பாளரின் கேட்புரை 09.03.2022 & 07.04.2022 அன்று நடைபெற்றது. மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள், எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள் மற்றும் இருதரப்பினராலும் கேட்புரை நாளில்

எடுத்துரைக்கப்பட்ட வாதங்கள் ஆகிய அனைத்தையும் ஆராய்ந்து மின்குறைதீர்ப்பாளரால் கீழ்க்கண்ட ஆணை வழங்கப்படுகிறது.

## ஆணை

1. **மேல்முறையீட்டாளரின் கோரிக்கை:**

மேல்முறையீட்டாளரின் மின் இணைப்பில் செலுத்திய அதிகப்படியான மின் கட்டணத் தொகையை திருப்பி வழங்குமாறு மேல்முறையீட்டாளர் விண்ணப்பித்துள்ளார்.

2.0 **வழக்கின் சுருக்கம்:**

2.1 மேல்முறையீட்டாளரின் மின் இணைப்பு எண் 313-205-3898-இல் அசாதாரணமாக மின் அளவீடு வந்ததால் 27.07.2021 அன்று எதிர்மனுதாரருக்கு புகார் அளித்ததாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

2.2 மேற்கூறிய புகாரின் பேரில் எந்த நடவடிக்கையும் இல்லாததால் மேல்முறையீட்டாளர் சென்னை மின்பகிர்மான வட்டம்/தெற்கு-II, மின் நுகர்வோர் குறைதீர் மன்றத்தை 31.07.2021 அன்று அணுகியுள்ளார்.

2.3 மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம், சென்னை மின்பகிர்மான வட்டம்/தெற்கு-II, 08.10.2021 அன்று தன்னுடைய ஆணையை அளித்துள்ளது. மன்றம் அளித்த தீர்ப்பில் அதிருப்தியுற்றதால் இந்த மேல்முறையீட்டு மனுவினை மேல்முறையீட்டாளர் மின்குறைதீர்ப்பாளரிடத்தில் சமர்ப்பித்துள்ளார்.

3.0 **மன்றத்தின் தீர்வு:**

சென்னை மின்பகிர்மான வட்டம்/தெற்கு-II, மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் தன்னுடைய தீர்வை 08.10.2021 நாளிட்ட ஆணையில் தெரிவித்துள்ளது. அந்த ஆணையின் சம்பந்தப்பட்ட பத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*"**மன்றத்தின் தீர்வு**:*

*The Forum observed that the good condition of the meter was ascertained by MRT. Hence request of the petitioner to refund the amount is not feasible of compliance.*
*Hence the CGRF petitioner disposed off without any orders."*

## 4.0 மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை:

4.1 மேல்முறையீட்டாளரும் எதிர்மனுதாரரும் தங்களது தரப்பு வாதங்களை நேரில் எடுத்துரைப்பதற்கு வசதியாக 09.03.2022 மற்றும் 07.04.2022 அன்றும் கேட்புரை நடத்தப்பட்டது.

4.2 மேல்முறையீட்டாளர் சார்பாக திரு இரா. கிருஷ்ணன் அவர்கள் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தன்னுடைய வாதத்தை எடுத்துரைத்தார்.

4.3 எதிர்மனுதாரர் சார்பாக திரு K. சிவராமன், உதவி செயற்பொறியாளர்/ இ&ப/ சேலையூர், சென்னை மின்பகிர்மான வட்டம்/தெற்கு–II அவர்கள் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தன்னுடைய வாதத்தை எடுத்துரைத்தார்.

4.4 மின்குறைதீர்ப்பாளரின் முன்பு சமர்ப்பிக்கப்படும் மனு மேல்முறையீட்டு மனு என்பதால் மின்குறைதீர்மன்றத்தில் மனுதாரரால் வைக்கப்பட்ட கோரிக்கைகள் சம்மந்தப்பட்ட வாதங்கள் மட்டுமே தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது. குறைதீர் மன்றத்தின் நடவடிக்கைகள், குறைதீர் மன்றத்தில் சமர்ப்பிக்கப்படாத புதிய நிவாரணங்கள் அல்லது பணியாளர் ஒழுங்கு நடவடிக்கை சம்மந்தப்பட்ட கோரிக்கைகள் முதலியன மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்குறைதீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறை விதிகளின்படி மின்குறைதீர்ப்பாளரின் தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை.

## 5.0 மேல்முறையீட்டாளரின் வாதங்கள்:

5.1 தனது வீட்டின் மீட்டர் பழுதினால் 26.07.2021 அன்று அசாதாரணமாக reading 2580 units (daily average 43 units) மின் கட்டணம் ரூ.15,508/– என கணக்கிடப்பட்டதாகவும், 27.07.2021 அன்று புகார் அளித்ததற்கு நடவடிக்கை இல்லை எனவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.2 எனவே மின் நுகர்வோர் குறைதீர் நாள் கூட்டத்தில் 31.07.2021 அன்று புகார் அளித்துள்ளார். 17.09.2021–இல் இணையவழி விவாதத்தில் விரிவாக விளக்கியதை ஏற்றுக்கொண்டார்கள். ஆனால் எதிர்வாதுரையில் தற்போது கூறிய பதில் உண்மையல்ல எனவும், அலுவலர்கள் சொல்வது போல் 26.05.2021 அன்று 7314

யூனிட்டுகள் அல்ல எனவும், 6496 யூனிட்கள் தான் என்பதற்கு போட்டோ ஆதாரம் உள்ளதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.3 மீட்டர் தவறாகத்தான் ஓடியது என்பதற்கான ஆதாரமாக

1) 26.05.2021 அன்று மின் நுகர்வு கணக்கு, போட்டோ மூலம்தான் எடுக்கப்பட்டது. இதில் 6496 யூனிட்டுகள் எனவும் பதிவேட்டில் எழுதியது 7314 யூனிட் அல்ல எனவும் தெரிவித்துள்ளார்.

அந்த போட்டோ இன்னும் தன்னிடம் உள்ளதாகவும், அதையும் 6450 யூனிட்டுகள் என அவர்களே தீர்மானித்து கட்டணம் வசூலித்ததாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார். CGRF குறைதீர் நாள் விவாதத்தில் தான் கூறியபோது மின்வாரிய அலுவலர்கள் பதில் கூற முடியாமல் சில நிமிடங்கள் மௌனமாய் இருந்ததாகவும், பின்பு முடிந்தவரை திருப்பித் தர முயல்கிறோம் எனக் கூறியதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

2) புகாருக்குப் பின் கூட 27.07.2021 முதல், மீட்டரை கழற்றிய நாள் 04.08.2021 வரையும் தினமும் அதிவேகமாக தவறாகத்தான் மீட்டர் ஓடியது. அதைக் கணக்கிட்டு அவ்வப்போது காட்டிவந்ததாகவும், 12.08.2021 அன்று சரி செய்த மீட்டரைப் பொருத்திய பின் தினமும் 9 யூனிட்டாக சரியாக ஓடிவருவதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.4 இதற்கான ஆதாரமாக 13.09.2021 அன்று AE, TNEB சோதித்து அவரே போட்டோ (9496 யூனிட்டுகள் என) எடுத்துச் சென்ளதாகவும், இதை CGRF கூட்ட விவாதத்தில் தான் செரிவித்ததாகவும், மீட்டர் தவறாகத்தான் ஓடியது, அதை மறைக்க முயல்வதாகவும், கொரானா காலத்தில் கணக்கிட்டது தவறு எனவும், அதுதான் காரணம் என்றும் பொதுவில் நடப்பதை தனக்கும் கூறுவதாகவும், தான் போட்டோ கொடுத்ததை மறைப்பதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.5 26.07.2021 அன்று அவர்கள் கணக்கெடுத்த பின்பு 27.07.2021 அன்று ஒரு புகாரை மாடம்பாக்கம் மின்வாரிய அலுவலகத்திற்கு குடும்பத்துடன் சென்று கொடுத்ததாகவும், பொதுமக்கள் ஏராளமான பேர் எங்கள் முன்னிலையில் இதே காரணத்தால் அதாவது அதிகப்படியான மின் கட்டணம் பற்றியே பணியாளர்களுடன் சண்டையிட்டுக் கொண்டிருந்ததாகவும், தாங்கள் AE, TNEB வருவார் என மாலை 3 மணி

வரை காத்திருந்தும் அவர் வரவில்லை. வசூல் பணியாளர் ஒருவர் தங்களை அழைத்து கட்டணத்தை சோதித்து இது அதிகம், தவறுதான் என்றதாகவும், ஒரு தனி வீட்டுக்கு இது அதிகம், 2021 ஜீலை மாதத்தில் சென்னையின் பல பகுதிகளிலும் இந்தப் பிரச்சனையில் மக்கள் அலுவலகங்களில் சண்டையிட்டார்கள், அதற்கான காரணங்களும் இதுவாகவே இருந்ததாக கூறியதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.6 2021 மே மாதத்தில் கொரோனா காலத்தில் பொதுமக்கள் குறைத்துக் காட்டி ஏமாற்றினார்கள் என்பது போல் பொதுவான ஒரு காரணத்தை மின்வாரியம் கூறிவருவதாகவும், தான் 2021 மே மாதத்திலும் கொரோனா காலத்தில் போட்டோ எடுத்து காட்டி, பதிந்து, மின் கட்டணம் 650 யூனிட்டுக்கு எப்போதையும் விட அதிகமாக ECC செலுத்தி உள்ளதாகவும், மீண்டும் 2021 ஜுலையில் 5 மடங்கு அதிக யூனிட்டுகள் பயன்படுத்தியதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.7 எனவே மேலே கூறியுள்ள இரண்டு ஆதாரங்களை ஏற்று (2580 Unit) அதிக மின் கட்டணம் ரூ.15,508/–ஐ திருப்பித்தர உத்தரவிடுமாறு மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

**6.0 <u>எதிர்மனுதாரரின் வாதங்கள்</u>:**

6.1 மின் இணைப்பிற்கான மின் அளவியில் உள்ள தரவுகள் அனைத்தும் பதிவிறக்கம் செய்யப்பட்டு ஆய்வு கூடத்திற்கு அனுப்பப்பட்டு ஆய்வு அறிக்கை பெறப்பட்டுள்ளதாகவும், அதில் மின் அளவி குறைபாடுகள் ஏதும் இன்றி நல்ல முறையில் இயங்குவதாக குறிப்பிடப்பட்டுள்ளதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.2 மேலும் 05/2021 மாதத்திற்கான மின் அளவீடு கொரோனா பரவல் அதிகப்படியாக இருந்தமையால், அரசு ஆணைப்படி முந்தைய மாத அளவீடு பதிவேற்றம் செய்யப்பட்டதாகவும், ஆனால் அதை மின் நுகர்வோர் ஏற்கமறுத்து, அவர் சுயமாக மின் அளவு எடுத்து வந்து அலுவலக பதிவேட்டில் பதிவு செய்ததின் அடிப்படையில் மீண்டும் PMC ரீடிங் மாற்றம் செய்யப்பட்டதாகவும், ஆனால் மின் அளவியை மின் அளவி பரிசோதனைக் கூடத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டதாகவும், அந்த மின் அளவியை பரிசோதனை செய்ததில் 26.05.2021 தேதியில் 7314 யூனிட் பயன்படுத்தியது உறுதி செய்யப்பட்டதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.3 எனவே மின் நுகர்வோர் தவறுதலாக 864 னிட் குறைவாக அலுவலக பதிவேட்டில் குறிப்பிட்டதால் 07/2021 மாதத்தில் உபயோகப்படுத்திய மின் அளவீட்டுடன் விடுபட்ட 864 யூனிட்டுடன் சேர்த்து ரூபாய் 15508/- (2589 units) வந்துள்ளதாகவும், ஆகவே பிரிவு அலுவலகத்தில் தொடர்ச்சியாக தகுந்த மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.4 மேலும் கணக்கீட்டாளர் 26/7/2021 அன்று எடுத்த மின் அளவீடும் (9030 யூனிட்) பரிசோதனை கூடத்தில் எடுத்த அளவீடும் (9022.03 யூனிட்) சற்று ஏறக்குறைய சரியாக இருப்பது தெரியவருகிறது. எனவே மின் அளவியில் எந்த குறைபாடும் இல்லை என்பதும் இதன் மூலம் உறுதிப்படுத்தப்படுகிறது.

6.5 மேற்கண்ட தகவல்களை நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தின் தலைவர் அவர்களுக்கு 08.10.2021 அன்று தெரிவித்து அதன் அடிப்படையில் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்ற புகார் எண் 311/08.10.2021 தள்ளுபடி செய்து உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.6 எனவே மேற்குறிப்பிட்டுள்ள உண்மை ஆதாரங்களின் அடிப்படையில் புகார் எண் 04/22-ஐ தள்ளுபடி செய்து உத்தரவு பிறப்பித்து நீதியை வழங்க வேண்டுமாய் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

**7.0 மின் குறைதீர்ப்பாளரின் தீர்வு:**

7.1 இருதரப்பு வாதங்கள் மற்றும் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் ஆகியவற்றை ஆராய்ந்து கீழ்க்கண்டவாறு தீர்வு செய்யப்படுகிறது.

7.2 மின் இணைப்பு எண்.313-205-3898, திரு.P.மகாராஜா மற்றும் K.பேச்சியம்மாள் என்ற பெயரில் வீட்டிற்கான மின் வீதப்பட்டியில் (LT-Tariff-IA) பெறப்பட்டு உபயோகத்தில் உள்ளது. இம்மின் இணைப்பில் 7/2021 மாத மின் கணக்கீட்டில் அசாதாரண உபயோகத்தினை பதிவு செய்துள்ளதாக **மேல்முறையீட்டாளர்** தெரிவித்துள்ளார். அதாவது, 26.07.2021 அன்று மேற்கொள்ளப்பட்ட மாத மின்கணக்கீட்டில் (26.5.2021 முதல் 26.7.2021 இடைப்பட்ட காலத்தில்) 2580 யூனிட்கள் பதிவானதாகவும் அதற்காக ரூ.15,508 மின்கட்டணம் விதிக்கப்பட்டதாக தெரிவித்துள்ளார்.

7.3 அதற்கு முந்தைய மாத மின்கணக்கீட்டின்போது, 26.5.2021 அன்று கொரோனா காலத்தின் பொதுமுடக்கத்தின் காரணமாக நேரடியான மின் அளவீடு மேற்கொள்ளாததால் முந்தைய கால அடிப்படையில் (PMC Billing) கணக்கீடு மேற்கொள்ளப்படவேண்டிய நிலையில் மேல்முறையீட்டாளர் தானே எடுத்துவந்த மின் அளவீட்டின் அடிப்படையில் Reading 6450 என எதிர்மனுதாரரால் பதிவுசெய்யப்பட்டுள்ளது. 26.7.2021 அன்று நேரடி மின்கணக்கீட்டின்போது Reading 9030 என பதிவுசெய்யப்பட்டுள்ளது. இவ்வாறு 7/2021 மாத கணக்கீட்டில் 2580 யூனிட்கள் பதிவானதை அசாதாரண மின்அளவீடு எனவும் மின்னளவியின் குறைபாட்டினால் அதிகப்படியாக பதிவானதாகக்கூறி **மேல்முறையீட்டாளர்** புகார் செய்துள்ளார்.

7.4 அவரது புகாரின் அடிப்படையில் மேல்முறையீட்டாளரின் உபயோகத்தில் உள்ள வரிசை எண்.00721559 கொண்ட மின்னளவி Meter Relay Tests (MRT) பரிசோதனைக்கூடத்திற்கு அதன் தன்மை குறித்த ஆய்விற்காக 4.8.2021 அன்று அனுப்பப்பட்டுள்ளது. அவ்வாய்வின் அறிக்கையும் மின்குறைதீர்ப்பாளருக்கு பெறப்பட்டுள்ளது. CMRI வாயிலாக பதிவிறக்கம் செய்யப்பட்ட விவரங்கள் சில கீழ்வருமாறு.

| **Meter Details** | | | |
|---|---|---|---|
| Consumer Code | 1 | Automatic Resetting Date & time | 00:00:00 hrs of 1st day of odd month |
| Consumer Name | TANGEDCO | LS Integration Period | 30 Mins |
| Meter Constant | 1600 imp/kWh | kVAh computation Logic (LAL/LAU) | LAL (lead as lead only logic) |
| Location name | Hyderabad | Demand Integration Period | 30 Min (Fixed Block) |
| Meter serial Numberl (0.0.96.1.0.255) | 00721559 | Meter Read Time (PC/CMRI) | 11/08/2021 11.34.42 |
| File Creation Time | 09/03/2022 14:05:06 | Meter Type (0.0.94.91.12.255) | 10-60 A |
| Voltage rating | 3 x 240 V | Current rating (0.0.94.91.12.255) | 10-60 A |
| Meter Software Version | PTF04-H740.1 | BCS Software Version | 36MS ICS 1.0.4.18 (TANGEDCO) |

| | | | |
|---|---|---|---|
| Number of Resets | 12 | Last Reset Date time | 01.07.2021 00:00:00 |
| Power off days | 190 days | Manufactured Month and Year (0.0.96.1.4.255) | 03/2019 |
| CMRI Serial Number | SS 111111 | CMRI Upload Date and Time | 11.08.2021 13:00:28 |
| Meter RTC (0.0.1.0.0.255) | 11.08.2021 11.33.15 | Meter Make (0.0.96.1.1.255) | Linkwell Telesystems Pvt Ltd., |
| Meter & Current Rating of Internal CT (1.0.0.4.2.255) | 1 | Make & Current Rating of Internal PT (1.0.0.4.3.255) | 1 |

| **Reset No.** | **Reset Date & Time** | **Cumulative kWh** | **Cumulative kVAh** |
|---|---|---|---|
| 1 | 01.01.2021 00:00:00 | 4624.8154 | 5164.9651 |
| 2 | 01.03.2021 00:00:00 | 5169.9975 | 5753.4242 |
| 3 | 01.05.2021 00:00:00 | 6496.1495 | 7079.6357 |
| 4 | 01.07.2021 00:00:00 | 8427.4765 | 9012.7847 |

| | **As per Consumer Ledger** | | **As per MRT (CMRI) report** | |
|---|---|---|---|---|
| | Reading | Consumption | Reading | Consumption |
| 22.03.2021 | 5600 | | | |
| 26.05.2021 | 6450 | 850 | 7314.2720 | 1714 |
| 26.07.2021 | 9030 | 2580 | 9022.0353 | 1708 |
| | | | | |

7.5 மேல்முறையீட்டாளர் கொரோனா காலத்தில் 26.05.2021 அன்று எதிர்மனுதாரரால் நேரடி மின்கணக்கீடு செய்யப்படாததால் தானே மின்அளவினை போட்டோ மூலம் எடுத்து கொடுத்ததாகவும், அதன்படியான மின்அளவு 26.05.2021 அன்றுள்ளபடி 6496 ஆகும் என கூறியுள்ளார். அதையே 6450 என எதிர்மனுதாரரால் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

7.6 எதிர்மனுதாரர் கூற்றின்படி 26.05.2021 அன்றுவரையிலான பதிவான மின்அளவு CMRI பதிவின்படி 7314 ஆகும், ஆனால் மேல்முறையீட்டாளர் 6496 என தானாக தெரிவித்த மின்னளவு தவறாக குறிப்பிட்ட காரணத்தினால் 5/2021 மாதத்தில் வெறும் 850 யூனிட் மட்டுமே கணக்கிடப்பட்டதாகவும் அதன் விளைவாகவே 7/2021 மாத கணக்கீட்டில் 2580 யூனிட் கணக்கீடு செய்யப்பட்டதாகவும் தெரிவித்துள்ளார்.

7.7 மேற்கண்ட அட்டவணையில் CMRI மூலம் பதிவிறக்கம் செய்யப்பட்ட விவரங்களின் அடிப்படையில் 1.5.2021 அன்று 6496 யூனிட் பதிவாகியுள்ளதை அறியமுடிகிறது, மேல்முறையீட்டாளர், தான் 26.5.2021 அன்று மின்னளவியில் 6496 யூனிட் காட்டியதாக கூறியதை அவர் அளித்துள்ள போட்டோவுடன் சேர்த்து ஆராயப்பட்டது. மின்னளவியில் இருவகையான மின்னளவு பதிவுகாட்டப்படுகிறது. ஒன்று அன்றைய “Current” Reading மற்றொன்று “Bill” என குறிப்பிடும் “Reset” காலத்தில் பதிவான பிந்தைய Reading ஆகும். அதன் அடிப்படையில் மேல்முறையீட்டாளரால் எடுக்கப்பட்டது 1.5.2021 அன்று Reset-ல் பதிவான Reading-ஐ தவறாக எடுத்த காரணத்தினால் 6496 என மேல்முறையீட்டாளரால் கூறப்படுகிறது. இதனை Reset அன்று 1.5.2021-ல் பதிவான மின்னளவில் (6496) ஒத்துள்ளதை அறியமுடிகிறது.

7.8 மேலும் பரிசோதனைகூடத்திற்கு அனுப்பப்பட்ட மின்னளவியினை பரிசோதனை செய்து அளித்துள்ள அறிக்கையில் மின்னளவி பழுதுள்ளதாக ஏதும் தெரிவிக்கவில்லை. மேலும் ஒவ்வொரு நாளும் பதிவான விவரங்களை தெளிவாகக்காட்டியுள்ளது, ஆகையால் மின்னளவி நல்லநிலையில் உள்ளதாகவே கருதவேண்டும். மின்னளவி பரிசோதனைக்கூடம் என்பது அதனை பரிசோதிக்கும் இடமேயன்றி அதனை சரிசெய்யும் இடமல்ல. மேலும் அதே மின்னளவியே 04.08.2021-ற்கு பின்னரும் 22.03.2021-ற்கு முன்னரும் பயன்பாட்டில் இருந்துள்ளதால் மின்னளவியில் குறைபாடு உள்ளதாக கருதஇயலாது. 5/2021 மாத கணக்கீட்டிலேயே மேல்முறையீட்டாளரால் மின்னளவு குறைவாக வழங்கப்பட்டதாலேயே

7/2021 மின்கணக்கீட்டில் அதிகப்படியாக மின்னளவு (2580 யூனிட்) கணக்கிடப்பட்டுள்ளதாக அறியமுடிகிறது.

7.9. ஆகையால், மேற்கண்ட தெளிவின் அடிப்படையில் CMRI மூலம் பெறப்பட்டுள்ள மின்னளவினை அடிப்படையாகக்கொண்டு, அதாவது 26.05.2021 அன்று பதிவான **மின்பயன்பாடு** 7314 யூனிட் எனவும், 26.07.2021 **அன்றைய மின் கணக்கீட்டின் அடிப்படையிலான** 9030 யூனிட்-ஐ அடிப்படையாகக்கொண்டு மின்கணக்கீட்டினை மறுகணக்கீடு செய்யுமாறு தீர்வுசெய்கிறேன்.

**8.0 முடிவுரை:**

8.1. பத்தி 7**–இல்** கண்ட கூர்ந்தாய்வின் அடிப்படையில் மேல்முறையீட்டாளரின் மின்னினைப்பில் உள்ள மின்னளவியில் குறைபாடு இல்லை என கருதுகிறேன். அதன் அடிப்படையில் CMRI மூலம் பெறப்பட்ட மின்னளவினை கணக்கிற்கொண்டு 5/2021மற்றும் 7/2021 **மாதங்களுக்கு** மறுகணக்கீடு செய்யுமாறும், அதில் ஏதும் அதிகப்படியாகவோ **அல்லது** குறைவாகவோ வசூலிக்கப்பட்டிருந்தால் அதை அடுத்த கணக்கீட்டில் சரிசெய்து வழங்கப்படவேண்டும் எனவும் ஆணையிடுகிறேன்.

8.2. மேற்கண்ட ஆணையை நிறைவேற்றியமைக்கான அறிக்கையை **இவ்வாணை கிடைக்கப்பெற்ற நாளிலிருந்து** 15 நாட்களுக்குள் **சமர்ப்பிக்க வேண்டுமென அறிவுறுத்தப்படுகிறது.**

**8.3 மேற்கண்ட தீர்வுடன் இந்த மேல்முறையீட்டு மனு எண் 04/2022 முடிவுக்கு கொண்டு வரப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.**

**(செ. தேவராஜன்)**
மின்குறைதீர்ப்பாளர்

"நுகர்வோர் இல்லையேல், நிறுவனம் இல்லை"
**"No Consumer, No Utility"**

<u>பெறுநர்</u>:

1. திரு பு. மகாராஜா,
A2, ஸ்ரீ சாய் இல்லம்,
பஜனை கோயில் முதல் குறுக்குத் தெரு,
வேங்கைவாசல், தாம்பரம்,
சென்னை – 73.

2. செயற்பொறியாளர்/ தாம்பரம்,
சென்னை மின் பகிர்மான வட்டம்/தெற்கு II,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
110/11KV, தாம்பரம் துணை மின் நிலைய வளாகம்,
புதுதாங்கல், முல்லை நகர்,
தாம்பரம் மேற்கு,
சென்னை – 600 045.

3. மேற்பார்வை பொறியாளர், – By email
சென்னை மின் பகிர்மான வட்டம்/தெற்கு–II,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
110 KV, துணை மின் நிலைய வளாகம்,
கே.கே. நகர், சென்னை – 600 078.

4. தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர், – By email
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை, சென்னை – 600 002.

5. செயலாளர், தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், – By email
4வது தளம், சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை – 600 032.

6. உதவி இயக்குநர் (கணினி) – தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் இணையதளத்தில் வெளியிடுவதற்காக
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், 4வது தளம்,
சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை,
கிண்டி, சென்னை – 600 032.